**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 217 நாள்: 17.06.2026

**பசுமை நிறைந்த சீர்மிகு நகரமாக சென்னையை உருவாக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, சென்னை விமான நிலைய சாலையின் இருபுறமும் நடைபாதைகளை மேம்படுத்துதல், பூங்காவில் செடிகள், மரக்கன்றுகள் நடுதல், பாலங்களில் வண்ண ஓவியங்கள் வரைதல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பசுமை நிறைந்த சீர்மிகு நகரமாக சென்னையை உருவாக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, மாநகராட்சி சார்பில் சென்னை முழுவதும் மரக்கன்றுகள் நடுதல் மற்றும் பாலங்கள் மற்றும் சுவர்களில் அழகுப்படுத்தும் வகையில் வண்ண ஓவியங்கள் வரைதல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக ஆலந்தூர் மண்டலம், வார்டு-160க்குட்பட்ட சென்னை விமான நிலைய சாலை மற்றும் சென்னை மெட்ரோ இரயில் மேம்பாலம் அருகில் உள்ள பூங்கா ஆகிய பகுதிகளில் இருபுறமும் உள்ள நடைபாதைகளை மேம்படுத்துதல் மற்றும் பாலங்களில் வண்ண ஓவியங்கள் வரைதல், பூங்காவில் அதிகளவில் செடிகள் மற்றும் மரக்கன்றுகள் நட்டு பராமரித்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்வது தொடர்பாக இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.06.2026) பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து தொடங்கி முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட கணேசபுரத்தில் நடைபெற்று வரும் உயர்மட்ட மேம்பாலப் பணிகள் மற்றும் போக்குவரத்து மாற்றுப்பாதை குறித்தும், வார்டு-72ல் உள்ள கால்நடை காப்பகத்தினைப் பார்வையிட்டு இப்பகுதியில் உள்ள கால்நடைகளை இங்கு வைத்து பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், ஓட்டேரி நல்லா கால்வாயில் நீர் வெளியேறும் பகுதி, கணேசபுரம் சுரங்கப்பாதையில் உள்ள நீரேற்று நிலையம், வ.உ.சி. நகர் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்கள், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-45க்குட்பட்ட கணேசபுரம் பிரதான சாலையில் உள்ள மழைநீர் வடிகால்கள், அடையாறு மண்டலம், வார்டு-171க்குட்பட்ட திரு.வி.க.நகர் பாலம் ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின் போது, சீர்மிகு சென்னையாக மாற்றும் வகையில் நடைபாதைகளை மேம்படுத்தி, சுவர்கள் மற்றும் பாலங்களில் சுவர்கள் வண்ண

ஓவியங்கள் வரைதல், சாலைகளின் மையத்தடுப்புகள், பூங்காக்கள், சாலையோரங்களில் அதிகளவில் மரக்கன்றுகள் நட்டு தொடர்ந்து பராமரித்திடவும், மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின் போது, வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., (தெற்கு), மண்டல அலுவலர்கள் திரு.ஜி.சொக்கலிங்கம்பிள்ளை, திரு.எஸ்.முருகதாஸ், திரு.ஏ.ராஜ்குமார், திரு.என்.காளிதாஸ் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**